நகராட்சி அலுவலகம்,
சாத்தூர்.
நாள்: 27.10.2023
---------------------------------------

## சாத்தூர் நகர்மன்றம் சாதாரணக் கூட்டம் அறிவிப்பு

**கூட்டம் எண். 20**

**நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2053ம் வருடம் ஐப்பசி 13 ஆம் நாள் 2023ம் ஆண்டு அக்டோபர் மாதம் 30.10.2023ம் தேதியன்று திங்கள்கிழமை மாலை 4.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகர்மன்றக் கூட்ட அரங்கில் வைத்து நகர்மன்றத் தலைவர் அவர்கள் தலைமையில் சாதாரணக் கூட்டம் நடைபெற உள்ளது. மேற்படி கூட்டத்திற்கு நகர்மன்ற துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.**

**நகர்மன்றத் தலைவர்**
**சாத்தூர் நகராட்சி.**

**பொருள் எண்.1**

சாத்தூர் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்கள், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள், பொறியியல் பிரிவு குழாய் பொருத்துநர், வால்வு ஆப்ரேட்டர், ஓட்டுநர்கள், மகப்பேறு உதவியாளர்கள் மற்றும் மகப்பேறு ஆயா மற்றும், பொதுப்பிரிவு அலுவலக உதவியாளர்கள், நகரமைப்பு பிரிவு சங்கிலியாளர் ஆகிய பணியாளர்களுக்கு 2023-2024ம் ஆண்டிற்கான சீருடை விபரம் கீழ்க்கண்டவாறு

| வ.எண் | பிரிவு | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | பொது சுகாதாரப்பிரிவு தூய்மைப்பணியாளர்கள் | 16 | 14 | 30 |
| 2 | பொது சுகாதாரப்பிரிவு துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் | 4 | - | 4 |
| 3 | பொது சுகாதாரப்பிரிவு ஓட்டுநர்கள் | 6 | - | 6 |
| 4 | பொது சுகாதாரப்பிரிவு மகப்பேறு உதவியாளர்கள் | - | 2 | 2 |
| 5 | பொது சுகாதாரப்பிரிவு மகப்பேறு ஆயா | - | 1 | 1 |
| 6 | பொறியியல் பிரிவு குழாய் திருப்புநர் | - | 1 | 1 |
| 7 | நகரமைப்பு பிரிவு சங்கிலியாளர் | 1 | - | 1 |
| 8 | பொதுப்பிரிவு அலுவலக உதவியாளர்கள் | 1 | 2 | 3 |

மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ள பணியாளர்களுக்கு சீருடை வாங்குவதற்கும், ஆண், பெண் தூய்மைப்பணியாளர்களுக்கு சீருடை மற்றும் தையற்கூலி வழங்குவதற்கும் அரசு அங்கீகாரம் பெற்ற காதிகிராப்ட் நிறுவனங்கள் மூலம் கொள்முதல் செய்வதற்கும்,

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு தூய்மைப் பணி மேற்பார்வையாளர்கள் மற்றும் தூய்மைப் பணியாளர்கள் மற்றும் ஓட்டுநர்களுக்கு 2023-2024ம் ஆண்டுக்கு தேவைக்கான காலணிகள் விபரம் கீழ்க்கண்டவாறு

| வ.எண் | காலணி அளவு | ஆண் | பெண் |
|---|---|---|---|
| 1 | நம்பர்-5 | 0 | 1 |
| 2 | நம்பர்-6 | 0 | 2 |
| 3 | நம்பர்-7 | 3 | 3 |
| 4 | நம்பர்-8 | 8 | 4 |
| 5 | நம்பர்-9 | 5 | 4 |
| 6 | நம்பர்-10 | 3 | 0 |
| 7 | நம்பர்-11 | 1 | 0 |
| 8 | நம்பர்-12 | 0 | 0 |
| 9 | சூ | 6 | 0 |

மேற்கண்டவாறு 2023-2024ம் ஆண்டிற்கான சீருடைகள் மற்றும் காலணிகளை அரசு அங்கீகாரம் பெற்ற காதிகிராப்ட் நிறுவனம் மற்றும் சர்வோதயா சங்கம் மூலம் கொள்முதல் செய்யவும், அதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.3.00 லட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**நகர்மன்றத் தீர்மானம் எண்.354, நாள்: 30.10.2023**
**தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.2</u>**

இந்நகராட்சிக்கு சொந்தமான தினசரி மார்க்கெட்டில் அமைந்துள்ள கடை எண்.7, வரிவிதிப்பு எண்.128/72, திருமதி.மாரியம்மாள் என்ற பெயரில் உள்ளது. 2017-2018ம் ஆண்டு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதத்தின்படி, 9 ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அங்காடி மதிப்பு மற்றும் பதிவுத்துறை, பொதுப்பணித்துறை மூலம் வாடகை மறுநிர்ணயம் செய்யப்பட்டதில் மேற்கண்ட கடை எண்.7க்கு அதன் அளவை விட கூடுதலாக மாத வாடகை ரூ.3432/- என தவறுதலாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதனை மனுதாரர் கேட்டுக் கொண்டுள்ளதின்படி, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் ந.க.எண்.2958/2023/அ2, நாள்: 31.07.2023ன்படி மேற்கண்ட கடையினை அளவீடு செய்து சரியான மாத வாடகை ரூ.1950/- என குழுவால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதை மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1064/2017/ சி2)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.355, நாள்: 30.10.2023**
**தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.3**

சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட நென்மேனி ரோட்டில் உள்ள நகராட்சி உரக்கிடங்கில் உரம் தயாரிக்கும் 10.எச்.பி மோட்டார் பழுது ஏற்பட்டு இயக்க முடியாத நிலையில் உள்ளது. எனவே அதனை பழுது பார்க்கும் பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.20,000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 705/2023/ எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.356, நாள்: 30.10.2023**
**தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.4**

சாத்தூர் நகராட்சி உள்ளூர் குடிநீர் ஆதாரமான உறைகிணற்றில் 12.5 எச்.பி மோட்டார், சம்ப் மோட்டார் 4 எண்ணம் 2016-2017-ம் ஆண்டு வாங்கி இதுநாள் வரை இயக்கப்பட்டு வந்தது. மேலும் பல முறை பழுதாகி சரி செய்யப்பட்டு இயங்கப்பட்டு வருகிறது. தற்போது மோட்டார் முற்றிலும் அதன் உறுதி தன்மையினை முற்றிலும் இழந்து விட்டது. எனவே கீழ்க்கண்ட மோட்டார் சாமான்கள் வாங்கி மாட்டவும் அதற்கு ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.4,50,000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | 10 HP சப் மோட்டார் | - | 4 Nos |
| 2. | Transformer Oil | - | 100 |
| 3. | ATS - Starter Transformer | - | 9 No |

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 706/2023/ எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.357, நாள்: 30.10.2023**
**தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.5**

இந்நகராட்சிக்கு சொந்தமான பெரிய ஜெட்ராய்டு வாகனம் TN 67 BJ 4441 தண்ணீர் ஓஸ் ஜெட்டிங் ஜாயின்ட் பழுது ஏற்பட்டுள்ளது. எனவே புதியது மாற்றும் பணியினை மேற்கொள்ளுவதற்கு 22.09.2023 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டத்தில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளுக்கு ஒப்பநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | சாமுண்டீஸ்வரி இன்ஜினியரிங் ஒர்க்ஸ் | - | ரூ.1,45,140/- |
| 2. | வெற்றி ஆட்டோ மொபைல்ஸ் | - | ரூ.1,47,500/- |

அலுவலக குறிப்பு:

அ) மேற்கண்ட பணியினை ரூ.1,50,000-க்கு மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.322 நாள்:28.08.2023-ல் மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது.

ஆ) பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள சாமுண்டீஸ்வரி இன்ஜினியரிங் ஒர்க்ஸ் அவர்களின் ஒப்பந்தபுள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 620/2023/ எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.358, நாள்: 30.10.2023**
**தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.6**

சாத்தூர் நகராட்சி அலுவலகத்தில் உள்ள கணினிகள், யூபிஸ்கள் மற்றும் பிரிண்டர்களுக்கு 2023-2024-ம் ஆண்டிற்கு ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ளுவதற்கு 18.10.2023 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டத்தில் மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டன. பெறப்பட்ட விலைப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

1. Star Systems Services - ரூ.72,000/-
2. Genius - ரூ.73,500/-
3. Rathan Compueter - ரூ.74,500/-

அலுவலக குறிப்பு:

அ) மேற்கண்ட பணியினை ரூ.75,000-க்கு மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.348 நாள்:27.09.2023-ல் மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது.

ஆ) பெறப்பட்ட விலைப்புள்ளியில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள Star Systems Services அவர்களின் விலைப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 1782/2021/ எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.359, நாள்: 30.10.2023**
**தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.7**

சாத்தூர் நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகர்மன்ற தலைவர் மற்றும் ஆணையாளர் அவர்களின் அறைக்கு புதியதாக 1.5 Tone AC புதியதாக வாங்கவும், மேலும் ஏற்கனவே உள்ள ஆணையாளர், பொறியாளர் மற்றும் உதவி கணினி திட்ட அமைப்பாளர் அறையில் உள்ள AC-னை பழுது பார்க்கவும் ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.1,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 752/2023/ எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.360, நாள்: 30.10.2023**
**தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.8**

சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட வார்டு எண்.18 நென்மேனி ரோடு தெருவில் உள்ள மின்மோட்டார் BED பழுது அடைந்துள்ளது. அதனை பழுது பார்க்கும் பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.25,000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 753/2023/ எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.361, நாள்: 30.10.2023**
**தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.9**

சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட வார்டு எண்.18 நென்மேனி ரோடு தெருவிற்கு சீராக குடிநீர் கிடைப்பதில்லை. எனவே அப்பகுதியில் மூன்று புதிய 100mm வால்வு அமைக்கும் பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.55,000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 754/2023/ எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.362, நாள்: 30.10.2023**
**தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.10**

சாத்தூர் நகராட்சி பகுதிக்கு குடிநீர் சீராக வழங்கும் பொருட்டு உள்ளூர் குடிநீர் ஆதாரத்தினை மேம்படுத்துவதற்கு வைப்பாற்றில் புதியதாக கிணறு அமைத்து பைப் லையன் பதிப்பதற்கு நிலத்தடி நீர் ஆய்வினை (Groundwater Survey) மேற்கொள்ள ஆகும் செலவு தொகை ரூ.30,000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

குடிநீரின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண். 755/2023/ எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.363, நாள்: 30.10.2023**
**தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.11**

சாத்தூர் நகராட்சியில் தெருவிளக்கு பராமரிப்பு பணிகளை ஸ்ரீகங்கா எலக்ட்ரிக்ல்ஸ் திருநெல்வேலி மூலமாக இரண்டாம் ஆண்டிற்கான 01.09.2022 முதல் 31.08.2023 வரை பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது ஒப்பந்தகாலம் முடிவடையும் நிலையில் உள்ளது. நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களால் நகராட்சிகளில் உள்ள குடிநீர் பணி, பாதாளச் சாக்கடை பணிகள், பொது சுகாதார பணிகள் மற்றும் தெருவிளக்கு பராமரிப்பு பணிகளை போதிய நிரந்தர பணியாளர்கள் இல்லாததால் தனியார் நிறுவனங்கள் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்நகராட்சியில் தெருவிளக்கு பராமரிப்பு பணிகளை பார்ப்பதற்கு நிரந்தர பணியாளர்கள் எவரும் இல்லாத நிலையில் அரசினால் ஒப்பந்த அடிப்படையில் ஒப்பந்ததாரரை நியமனம் செய்யும் வரை ஏற்கனவே பார்த்து வரும் ஸ்ரீகங்கா எலக்ட்ரிக்ல்ஸ் திருநெல்வேலி நிறுவனத்திற்கு 31.12.2023 வரை நான்கு மாதங்களுக்கு மட்டும் கால நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

அ) தற்போது அளிக்கப்பட்ட கால அவகாசம் முடிவடைவதால் மேலும் நான்கு மாதங்களுக்கு டிசம்பர் 2023 வரை கால நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கவும், மேற்கண்ட பணியினை 2021-2022-ம் ஆண்டிற்கு ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்ட விலைவிகிதத்திற்கே பணியினை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) நான்கு மாதங்களுக்கு கால நீட்டிப்பு செய்தாலும் அரசினால் இடைப்பட்ட காலத்தில் தனியார் நிறுவனத்திற்கு ஒப்பந்தம் உரிமம் வழங்கும் பட்சத்தில் பழைய ஒப்பந்தக்காரர் மறுப்பு ஏதும் தெரிவிக்காமல் தமது ஒப்பந்த காலத்தினை முடித்து கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 957/2019/ எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.364, நாள்: 30.10.2023**

**தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.12**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு லாரி TN 67AH 6760 வாகனத்திற்கு தகுதிச்சான்று மற்றும் கீழ்க்கண்ட விபரப்படி பழுது நீக்கும் பணிகள் பார்ப்பதற்கும் ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.77,200/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

1. இஞ்சின் ஆயில் சர்வீஸ், டீசல் ஆயில் பில்டர் மாற்றவும்.
2. ஸ்டியரிங் பாக்ஸ், கியர் பாக்ஸ் கிரைவுன் ஆயில் சரிபார்த்து லிப்ட் ஆயில் குறைத்து ஊற்றவும்.
3. லிப்ட் கைப்பிடி சரி செய்து மாட்டவும்.
4. நான்கு வீல் கிரீஸ் பேக்கிங் செய்து பிரேக் செக்கப் செய்யவும்.
5. வாகனத்தில் உள்ள எலெக்ட்ரிக் வேலைகள் பேட்டரி சார்ஜ் போடவும்.
6. பெயிண்டிங் தகுதிச்சான்று வாசகங்கள் எழுதவும்.
7. வாகனத்தில் நான்கு பக்கம் ஸ்டிக்கர் ஒட்டவும்.
8. தகுதிச்சான்று பதிவு கட்டணம், புகை பரிசோதனைக் கட்டணம் கட்டுதல்.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.760/2023/எச்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.365, நாள்: 30.10.2023**

**தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.13**

நகராட்சி நிர்வாக தலைமைப் பொறியாளர் சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.10693/2022/இஏ1, நாள்:26.10.2023-ல் சாத்தூர் நகராட்சிக்கு பாதாள சாக்கடைத் திட்டத்தின் கீழ் இணைப்புகள் வழங்குவதற்கான உபவிதிகளுக்கு "பொது அங்கீகாரம்" (General Approval) அனுமதி வழங்கப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும்

**பாதாள சாக்கடை திட்டத்திற்கான கட்டண இணைப்பு**

| கட்டிட பரப்பளவு சதுர அடியில் | வைப்புத்தொகை வீட்டுஉபயோகம் | வைப்புத்தொகை பிற உபயோகம் | மாதக்கட்டணம் வீட்டு உபயோகம் | மாதக்கட்டணம் பிற உபயோகம் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 500 ச.அடி | ரூ.4,000/- | ரூ.8,000/- | ரூ.60/- | ரூ.120/- |
| 501 – 1200 ச.அடி | ரூ.5,000/- | ரூ.15,000/- | ரூ.70/- | ரூ.210/- |
| 1201 – 2400 ச.அடி | ரூ.7,000/- | ரூ.21,000/- | ரூ.80/- | ரூ.240/- |
| 2401 – க்கு மேல் | ரூ.8,000/- | ரூ.25,000/- | ரூ.90/- | ரூ.450/- |
| சிறப்பு இனம் | - | ரூ.1,00,000/- | - | ரூ.1000/- |

## நிபந்தனைகள்

1. நகராட்சி ஆணையர், சாத்தூர் அவர்கள் இப்பொருள் தொடர்பாக தற்போது அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ள உபவிதிகளை மாவட்ட அரசிதழில் (தமிழ் மற்றும் ஆங்கிலம்) பிரசுரம் செய்து, நகல் (மூன்று) இவ்வலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
2. இது குறித்து பொதுமக்களுக்கு தகுந்த கால அவகாசம் கொடுத்து தகவல் தெரியப்படுத்தப்பட வேண்டும்.
3. பயனாளிகளிடமிருந்து உத்தேசிக்கப்பட்டுள்ள முன்வைப்புத் தொகைகளை வசூல் செய்திட நடவடிக்கை எடுக்கவும் இதன் மூலம் அறிவுறுத்தப்படுகிறது.
4. "இறுதி ஒப்புதலுக்கு" நகர்மன்ற தீர்மானம் இயற்றி அதன் நகலுடன் அரசிதழில் வெளியிடப்பட்ட துணை விதிகளின் இரண்டு பிரதிகள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்) அனுப்பி வைக்கவும்.
5. இறுதி அங்கீகாரம் பெற கருத்துரு அனுப்பும் பொழுது உயர்நீதிமன்ற ஆணை எண்.24403/2008, நாள்: 20.11.2008 மற்றும் அரசாணை எண்.293, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:26.11.2010-ல் அறிவுறுத்தப்பட்டுள்ள வழிமுறைகள் உள்ளடக்கி அனுப்புதல் வேண்டும்.
6. தேவையான நகர்மன்ற தீர்மானம் மற்றும் துணைவிதிகளின் நகல்கள் போன்றவற்றுடன் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு முறைப்படி விண்ணப்பித்து "இறுதி அங்கீகாரம்" பெறப்பட வேண்டும்.
7. பாதாள சாக்கடைத் திட்டத்திற்கான உரிய அறிவுரைகளை பின்பற்றும்படியும், அனுமதியற்ற பாதாள சாக்கடை இணைப்புகளை முறைப்படுத்துதல் தொடர்பான அரசாணையை பின்பற்றும்படியும் அறிவுறுத்தப்படுகின்றது.
8. பொது அங்கீகாரம் பெற்ற பின் அதை நகர்மன்றத்தில் தீர்மானமாக நிறைவேற்றி நாளிதழில் பிரசுரம் ஆகும் முன் அத்தீர்மான நகலை இவ்வலுவலகத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

அலுவலக குறிப்பு:

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
(ந.க.எண். 2053/2006/ எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.366, நாள்: 30.10.2023**
**தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**(ஒம்) ச.குருசாமி,**
**நகர்மன்றத் தலைவர்,**
**சாத்தூர் நகராட்சி.**

**/உண்மை நகல்/**

**ஆணையாளர்**
**சாத்தூர் நகராட்சி.**